நேரம்: 2 மணி நேரம் VIII – சமூக அறிவியல் மதிப்பெண்: 100

## பகுதி – அ

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் குறியீட்டுடன் எழுதுக. (14 x 1 = 14)**

1. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு
   அ) 1757  ஆ) 1758  இ) 1759  ஈ) 1760

2. கீழ்க்காணும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையைக் குறிப்பிடவும்.
   i) வேலூர் புரட்சி 1801 ஆம் ஆண்டு ஏற்பட்டது.
   ii) நான்காம் மைசூர் போருக்குப் பின் திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர்.
   iii) வேலூர் புரட்சியின் போது வில்லியம் பெண்டிங் சென்னை ஆளுநராக இருந்தார்.
   iv) ஆங்கிலேயருக்கு எதிரான வேலூர் கலகத்தின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு ஆகும்.
   அ) i & ii சரி  ஆ) ii & iv சரி
   இ) ii & iii சரி  ஈ) i, ii & iv சரி

3. கூற்று : இந்திய கைவினைஞர்கள் பிரிட்டிஷாரின் காலனிய ஆதிக்கத்தால் நலிவுற்றனர்.
   காரணம் : பிரிட்டிஷார் இந்தியாவை தனது மூலப்பொருள் தயாரிப்பாளராகவும் முடிவுற்ற பொருட்களுக்கான சந்தையாகவும் கருதினர்.
   அ) கூற்று சரி காரணம் கூற்றுக்கான விளக்கம் ஆகும்
   ஆ) கூற்று சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை
   இ) கூற்றும் காரணமும் சரி
   ஈ) கூற்றும் காரணமும் தவறு

4. பண்டித ரமாபாயால் இந்து விதவைகளுக்காக பம்பாயில் தொடங்கப்பட்ட அமைப்பு
   அ) பிரம்ம சமாஜம்  ஆ) பிரார்த்தனை சமாஜம்
   இ) சாரதா சதன்  ஈ) ஆரிய சமாஜம்

5. .............. என்ற கருவி ஈரப்பதத்தை அளக்க பயன்படுகிறது.
   அ) காற்றுமானி  ஆ) அழுத்தமானி
   இ) ஈரநிலைமானி  ஈ) வெப்பமானி

6. புவியில் உள்ள நன்னீரின் சதவீதம்
   அ) 71%  ஆ) 97%  இ) 2.8%  ஈ) 0.6%

7. சரியான கூற்றை தேர்வு செய்யவும்.
   கூற்று : ஆப்பிரிக்காவின் நிலவியல் தோற்றங்களில் ஒரு முக்கிய அம்சம் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு ஆகும்.
   காரணம் : புவியின் உள்விசை காரணமாக புவியின் மேற்பரப்பில் உண்டான பிளவு.
   அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
   ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு

8. பொருத்துக.
   அ) புவிப்பட விளக்கம் - 1,450
   ஆ) வடகிழக்கு - பழுப்பு நிறம்
   இ) சம உயரக்கோடு - கருத்துப்படங்கள்
   ஈ) காணிப்படங்கள் - புவிப்படத்தின் திறவுகோல்
   உ) நிழற்பட்டைப்படம் - வரி விதிப்பு
   அ) 3, 5, 1, 4, 2  ஆ) 4, 1, 2, 5, 3
   இ) 2, 5, 1, 3, 4  ஈ) 5, 2, 4, 1, 3

9. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்.
   அ) குடியரசுத் தலைவர்  ஆ) துணைக் குடியரசுத் தலைவர்
   இ) பிரதம மந்திரி  ஈ) முதலமைச்சர்

10. FIR என்பது
   அ) முதல் தகவல் அறிக்கை  ஆ) முதல் தகவல முடிவு
   இ) முதல் நிகழ்வு அறிக்கை  ஈ) மேற்கூறிய எவையுமில்லை

11. இந்திய இராணுவப் படையின் முதன்மை நோக்கம்
   அ) தேசிய பாதுகாப்பு
   ஆ) தேசிய ஒற்றுமை
   இ) அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக் காத்தல்
   ஈ) மேற்கூறிய அனைத்தும்

12. இந்திய இரும்பு எஃகு ஆணையம் ஒரு .............. நிறுவனமாகும்.
   அ) மினிரத்னா  ஆ) மகாரத்னா
   இ) நவரத்னா  ஈ) இவற்றில் எதுவுமில்லை

## பிரிவு – ஆ

**II. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் 13க்கு விடையளி. (ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் இரு வினாக்களை கண்டிப்பாக தேர்ந்தெடுக்க வேண்டும்) (13 x 2 = 26)**

### பிரிவு (அ) வரலாறு

1. துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.
2. பாளைக்காரர்கள் என்பவர் யார்? சிலரின் பெயர்களைக் கூறுக.
3. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   அ) தட்ச சில இடிபாடுகளைக் கண்டறிந்தவர் .............. .
   ஆ) வேதம் என்ற சொல்லின் பொருள் .............. .
   இ) டில்லியில் மதரஸாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் .............. ஆவார்.
   ஈ) பள்ளிகளில் மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு .............. .

4. பிரிட்டிஷ் ஆட்சியின் போது மதராஸ் மாகாணம் உள்ளடக்கிய பகுதிகள் யாவை?

5. பொருத்துக.

| | | |
|---|---|---|
| பம்பாய் | - | சமய மையம் |
| கேதார்நாத் | - | மலை வாழிடங்கள் |
| டார்ஜிலிங் | - | பண்டைய நகரம் |
| மதுரை | - | ஏழு தீவு |

6. சமூக தீமைகள் சிலவற்றை பட்டியலிடுக.

## பிரிவு – ஆ புவியியல்

7. மண்ணின் வகைகளைக் கூறுக?

8. வேறுபடுத்துக.
வானிலை – காலநிலை

9. நீர் சுழற்சி – வரையறு.

10. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) அட்லஸ் மலை ............ கண்டத்தில் அமைந்துள்ளது.

ஆ) ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் ........... ஆகும்.

இ) ஆஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் மரம் ............ .

ஈ) அண்டார்டிகாவில் நிறுவப்பட்ட முதல் இந்திய ஆய்வு நிலையம் ........... .

11. இயற்கையமைப்பு புவிப்படம் என்றால் என்ன?

12. பாறைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பிரிவு – இ குடிமையியல்

13. குடியுரிமையின் வகைகளைக் குறிப்பிடுக.

14. மனித உரிமைகளின் ஐந்து முதன்மை பிரிவுகளை குறிப்பிடுக.

15. சார்க் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

16. பின்வரும் கூற்றுகளை படித்து சரியா / தவறா எனக் கூறுக.

அ) 1951 ஆம் ஆண்டு ஜனவரி 28ம் நாள் இந்திய உச்ச நீதிமன்றம் தொடங்கப்பட்டது.

ஆ) சதர் திவான அதாலத் ஒரு குற்றவியல் நீதிமன்றம் ஆகும்.

இ) இந்தியாவில் மிகப்பெரிய நீதிமன்றம் அலகாபாத் நீதிமன்றம் ஆகும்.

ஈ) இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கான நீதியை பாதுக்காக்கிறது.

## பிரிவு – ஈ பொருளியல்

17. அண்மை கால பணத்தின் வடிவங்கள் யாவை?

18. பொதுத்துறைகளின் மூன்று உறுப்புகள் யாவை?

## பகுதி – இ

**III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.** **(3 x 4 = 12)**

1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.

(அல்லது)

தேசியக் கல்விக் கொள்கை பற்றி விவரி.

(அல்லது)

சீர்திருத்த இயக்கத்தின் தாக்கம் குறித்து எழுதுக.

2. காற்றையும் அதன் வகைகளையும் பற்றி விவரி.

(அல்லது)

இடம் பெயர்தலுக்கான பல்வேறு காரணங்களை விளக்குக.

3. அண்டார்டிகா கண்டத்தின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றி விவரி.
ஒரு குடிமகன் எதனடிப்படையில் குடியுரிமையை தன் இழக்கிறான்?

(அல்லது)

சாலை விபத்துகளுக்கான காரணங்களை விவரி.
பஞ்ச சீலத்தின் ஐந்து கொள்கைகளை விவரி.

4. சேமிப்பு மற்றும் முதலீடு – ஆகியவற்றின் வேறுபாட்டைக் கூறுக.

(அல்லது)

5. பொதுத்துறையின் உறுப்புகள் பற்றி விளக்குக.

(அல்லது)

6. தனியார் துறையின் பணிகளைப் பற்றி எழுதுக.

## பகுதி – ஈ

1. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும். **(2 x 5 = 10)**
1) டெல்லி 2) மதராஸ் 3) நாளந்தா 4) கொச்சி 5) கல்கத்தா

2. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
1) இந்தியா 2) அட்லாண்டிக்கடல் 3) ஆஸ்திரேலியா 4) பிரேசில் 5) கனடா

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com